# Path to Dharma

## தர்ம நெறி(Dharma Neri)

## 69



**Sri Sankar Publications**

**KshethraVinayaka Temple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.**

க்ஷேத்திர (வயல்) விநாயக ஆலயம்,ஸ்ரீமுன்னேஸ்வரம், சிலாபம், ஸ்ரீ லங்கா.

**Author - B.S.Sarma**

**September 2013 செப்தெம்பர் (ஆவணி-புரட்டாசி)**

## Editorial.

' Path to Darma' the monthly magazine, published by KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, is presenting the 68th issue this month. The main intention of this magazine is to converse the perceptions linked to Hinduism and its ceremonial rituals, customs and dharma, to the anxious readers.

The elucidation and investigation from the readers are appreciated.

B.S.Sarma,

KshethraVinayaka Temple,

Sri Munneswaram, Chilaw, Sri Lanka. Sept. 2013

# Quatation

"Like the household fire, devotees seek the glory of the Lord even from afar and enshrine it in their inner chamber for enlightenment. The glory of our Lord is full of splendor, all-illuminative and worthy to be honored in every heart".

-Rig Vda

"Who by His grandeur has emerged sole sovereign of every living thing that breathes and slumbers, He who is Lord of man and four-legged creatures-what God shall we adore with our oblation?"

-Rig Veda

"Whatever exists and wherever it exists is permeated by the same divine power and force".

-Yajur Vda

"The inspired Self in not born nor does He die; He springs from nothing and becomes nothing. Unborn, permanent, unchanging, primordial, He is not destroyed when the body is destroyed".

-Yajur Veda

"He who with the truth of the atman, unified, perceives the truth of Brahman as with a lamp, who knows the God, the unborn, the stable, free from all forms of being, is released from all fetters".

-Yajur Veda

"Now, the teaching concerning the atman; the atman is below, it is above, it is behind, it is before, it is in the South, it is in the North, The atman indeed is all that is. He, who sees, reflects and knows this-he has joy in the atman".

-Sama Veda

"As one not knowing that a golden treasure lies buried beneath his feet may walk over it again and again but never find it- so all beings live every moment in the city of Brahman yet never find Him, because of the evil of illusion by which He is concealed".

-Sama Veda

"Pure consciousness, taking from as knowledge and action, is present in the soul everywhere and always, for the soul is universal in its unfettered state".

-Mrigendra Agama

"The three impurities are anava, maya and the one caused by actions".

-Suprabheda Agama

"All those visibles and invisibles, movables and immovables are pervaded by Me. All the worlds existing in the tattvas from Sakthi to prithivi (earth) exist in Me. Whether is heard or seen, internally or externally, is pervaded by Me ".


-Sarvajnanottara Agama


"Wherethere is mutual affection and regard between husband and wife, there alone will there be happiness and welfare".

- Manusmriti, 3. 60

# இந்துசமயம் - ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

பல சமயங்களின் திரட்டாகவும் ஒரு முழுமையான கதம்பமாகவும் திகழ்வதே இந்து சமயம் எனலாம் வாழ்க்கையின் ஒரு முழுமையான தோற்றமாக விளங்குவது இந்து சமயம். இடங்கடந்து அகன்று விரிந்து பரவி சகிப்புத்தன்மையைக் கொண்டது, இந்த இந்து சமயம். ஆழ்ந்த மனிதத்துவத்தின் ஆழம்காண முடியாத தன்மையுடையதாகவும், மிக உயர்ந்த ஆன்மீக நோககத்தைக் கொண்டதாகவும் இலங்குவது இந்து சமயம் என்று சொல்வது, சாலவும் பொருந்தும். முிக உறுதியானதும் மாற்றங்களுக்கு உட்படாத முக்கிய அடிப்படை அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது இந்து சமயம் எனினும் இடைப்பட்ட சமய வாழ்வு நெறியில் வந்து ஒட்டிக் கொண்டவைகளையும் அதிமுக்கியம் அற்ற சடங்கு சம்பிரதாயங்களைத் தவிர்த்தும், முக்கியமானதாக உள்ள அம்சங்களை ஏற்று, புதுமெருகூட்டலுடன் கூடிய நெகிழ்வுத்தன்மை கொண்டதுமாகவும் விளங்குவது இந்து சமயம். இவ்விதம் மாற்றங்களுக்கு உட்படக் கூடிய நெகிழ்வுடைய அம்சங்களைக் கொண்டதாக இருப்பதால் இந்து சமயம் பல்லாயிரம் ஆண்டு காலமாக, ஒரு பொற்காலப் பொலிவுடன் நிலைத்து இருக்கின்றது. வேறு எந்த ஒரு சமயத்திலும் இவ்வித நெகிழ்வுநிலை இருப்பதாக எண்ணமுடியாது. இந்து சமயத்தின் சகிப்புத் தன்மை மேலோங்கியது.






வேறெந்தமதத்திலும், இந்து சமயத்தில் அமைந்து உள்ளது போன்ற ஆன்மீக உண்மைகள் அத்திவாரமாக அமையவில்லை. என்றும் நிலையான சத்திய தரிசனத்திலும் உண்மைகளிலும் உறுதியாக நிலைக்கொண்டிருக்கும் படியாக இந்து சமய தத்துவதரிசிகளாலும் இருஷிகளாலும் இனம் காணப்பட்டதே இந்து சமயம்.

வேதங்களால் விளக்கப்பட்டுள்ள முடிவான அடிப்படை ஆதாரமான உண்மைநிலையாகிய சத்தியப்பொருள் - பிரம்மம் - என விழிக்கப்பட்டுள்ளது. இந்த சத்தியப் பொருளை ஞானக்கண்கொண்டு அறிந்து கொள்ள யோக அப்பியாசங்கள் உதவுகின்றன. மனத்தை ஒருநிலைப்படுத்துதவிய தியான மூலம்

"நானே பிரம்மம்" (அஹம், ப்ரம்மாஸ்மி") என்ற உண்மை வெளிப்பாடு, தான் (ஒருவன் அல்லது ஒருவர்) பிரமத்துடன் அபேதமற்ற நிலையான சத்திய நிலையை உணர்த்தியுள்ளது என்பதை காட்டுகின்றது.








**இந்து சமய வரலாறு**

இந்து சமயநெறி மிகப்பழமையானதும் பல பிரிவுகளுடைய சிக்கலான தரிசனங்களை உடையதுமான சமய உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. இந்து சமய வரலாற்றையோ அன்றேல் அதன் வளர்ச்சி முறையையோ அறிந்து கொள்வது சுலபமானதல்ல. ஏனெனில் ஒருமானிடனாலோ, குறிப்பிடத்தக்க ஒரு முனிவரினாலோ, ரிஷியினாலோ, சாஸ்திரவிற்பன்னனின் தத்துவ தரிசனத்தினாலோ அல்லது வெவ்வேறு மக்களின் சமய அனுட்டான முறைகளினாலோ ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் பற்பல ஜாதிவேற்றுமையுள்ள மக்களால் நான்காயிரம் (4000) ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே அவர்களின் சமய நம்பிக்கைகள், வேறுபட்டிருந்தாலும், அவை ஒன்றுடனும், பலதரப்பட்ட நம்பிக்கைகளுடனும் கலந்து, பின்னிப் பிணைந்து கொண்டு விளங்கி வந்திருப்பதை அறியக்கூடியதாக உள்ளது.

மிக நீண்ட சிக்கற் பின்னலாக உள்ளவரலாற்றை உடைய இந்து சமயம், மிகத்தொன்மையான கட்டுக்கதைகள், மகான்களின் வரலாறுகள், பரம்பரைக்கதைகள், பழக்கவழக்கங்கள், மக்களின் மனத்தில் நீண்ட காலமாக ஊறிய அனுபவ ரீதியில் கருத்தில் ஊன்றிய நம்பிக்கைகள், அனைத்தும் திரிபடைந்து, இந்திய மக்களின் நம்பிக்கையில் ஒன்றாகக் கலந்து கொண்ட மதக்கோட்பாடுகள், சிறு கிளை மத நம்பிக்கைகள், நடைமுறைச் சடங்குகள் முதலியவைகளின் திரட்டு என்று கூறலாம். எப்படியிருந்தாலும் இந்திய உபகண்டத்தின் மக்களின் பெரும்பான்மையினரின் மத நம்பிக்கைகளுடன் பின்னிப் பிணைந்துள்ள சடங்கு சம்பிரதாயங்களுடன் கூடியுள்ள தனித்தன்மை வாய்ந்த, அதாவது இந்திய நாட்டுக்கே உரிய மணவாசனை கலந்து பிசைந்துள்ளது என்பதை இந்து சமயம் தெளிவுபடுத்துகின்றது. எண்ணற்ற சிறு சிறு கிளைச்சமயங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பது இந்தியசமயநெறியின் சிறப்பு அம்சமாகும்.



## வரலாற்றுக்கு முற்பட்ட இந்து சமயம்

சிந்து சமவெளி நாகரிகக் காலத்தில் மிகச் செழித்து இந்திய தேசத்தின் வடமேற்குப் பகுதியில் நிலைகொண்டு விளங்கிய இந்து சமயத்தின் காலம் கி.மு. 3000 - தொடங்கிய 2000 கி.மு மத்தி வரையுள்ள இடைப்பட்ட காலமாகும். மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்னும் இரு பெரிய வளர்ச்சியுற்ற நகரங்களின் சூழலில் செழிப்படைந்த பண்பாட்டுக் கலாச்சார பின்னணியுடன் திகழ்ந்தது. சிந்து வெளிநாகரீகம். இந்தோ ஆரியர்கள் என்றழைக்கப்பட்ட நாடோடிக் கூட்டத்தினர் சிந்துவெளி நாகரிகப் பிரதேசத்துள் ஊடுருவி, கி.பி 1500 அளவில் இடப்பெயர்ச்சி மூலம் சிந்து வெளிநாகரிகத்தின் நிலைக்கு காற்கோளமைத்தனர். இந்தோ ஆரியர்களாகிய நாடோடிக்கூட்டத்தினரின் இந்தோ ஆரியர்களாகிய நாடோடிக்கூட்டத்தினரின் உள்ளுருவிய இடப்பெயர்ச்சியின் தாக்கத்தின் காரணமாக சிந்து வெளிநாகரிகம் ஏதோ மர்மமான முறையில் மறைந்து விட்டதை அறிகின்றோம்.



இந்தோ ஆரியர்களின் சமய நூல்கள் - வேதங்கள் - இந்து சமயத்தின் மூலமாக - களைகண் என்னும்படி பரவலாக யாவராலும் விதந்து பாராட்டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வேதங்களே இந்து சமயத்தின் தொன்மையானதென்றும் நிலைத்திருக்கக் கூடிய சத்தியவாக்காகவும் மேன்மையான பிரமாணமாகவும் உயர்வாகக் கொள்ளப்பட்டன.



ஹரப்பா நாகரிகமதை ஏனைய முன்னை நாகரிகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மனித சமுதாய சமத்துவத்தை உடையதாக விளங்கியது. மனிதர்களிடையே சாதிமுறையினால் ஏற்றத் தாழ்வுகள் அற்ற ஒரு சமுதாய அமைப்பைச் சுட்டிக் காட்டுவதாக விளங்கியது. வெங்கலத்தால் செய்யப்பட்ட ஒரு இளம்பெண் நளின நடனத்தோற்றத்துடன் துடுக்குடன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு ஒருவித நெளிப்புடன் நிற்பதைக் குறிப்பதாக காட்டும் சிறிய சிலை ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இச்சிலை ஆபரணங்களை

மட்டும் மேனியில் அணிந்திருப்பதை காட்டுவதாகவுள்ளது. இன்னும், தாய்த்தெய்வமாகக் கருதக்கூடிய அநேக சிறு சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைபற்றி, கல்விமான்கள் பலர் வெவ்வேறான கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். சமய வழிபாடுகளில் தாய்மையைப் போற்றும் குறிப்பை உணர்த்துவதாக இச்சிறு பெண் உருவங்கள் விளங்குவதாக, பொதுவாக கருதப்படுகிறது எனவும் இதுவே பிற்காலத்தில் சக்தி வணக்கத்துக்கு மூலாதாரமாக இருந்தது எனவும் பெண்மையின் ஒப்பற்ற மேன்மையான சக்தியின் ஆற்றலை உணர்த்துவதாகவும் கொள்ளப்படும் சக்தி வணக்கக் கொள்கையின் பரவலுக்கு இந்தியாவில் வழிகோலியது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதுவும் அல்லாமல் யோக நிட்டையில் அமர்ந்திருக்கும் ஒரு ஆணின் உருவம் மூன்று சிரசுகளுடனும் (முகங்கள்) இரு கொம்புகளுடனும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில், இந்து சமயத்தில் வணக்கத்துக்குரிய தெய்வமாக கொள்ளப்பட்ட சிவனுடன் ஒப்பிடப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் பல, சிவனுடைய உருவம் அமைந்த இலிங்கங்கள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.








கி.பி.1500 அளவில் ஆரியர்களால் கொண்டுவரப்பட்ட சமய சம்பிரதாய அனுட்டான முறைகள், யாவும் தொகுக்கப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டதே இந்து சமயம் - அது இந்தியாவுக்கே உரிய சுதேசிய சமயமாகிவிட்டது. முன்னைய படிமுறை இந்து சமயம் வைதீக (வேதங்களில் உள்ள முறையில்) வேள்வியாக - யக்ஞம் செய்தலாகிய வழிபாட்டு முறையில் நம்பிக்கை கொண்டிருந்தது. யக்ஞம் என்பது வேள்வி மூலம் இறைவனுடன் தகுந்த முறையில் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதும், பிரபஞ்சத்துடன் ஒரு நடைமுறை ஒழுங்கை ஏற்படுத்திக்கொள்வதும் ஆகிய நோக்கத்தைக் கொண்டதாகும். வேதங்கள் வேள்விபற்றிய விளக்கத்தையும், அதனை ஆதரித்து அதனை நன்கு நடைமுறைப்படுத்தும் துறையாகவும் இருக்கின்றது. இந்த நடைமுறை வளர்ந்தோங்கி, உபநிடதங்களின் உச்சசிந்தனைகளில் வந்து அடைந்துள்ளது. இந்த உபநிடதங்கள் பூடகமானதும் தீவிரசிந்தனையின் முடிந்த முடிவுகளின் பெறுபேறுகளாக வேதங்களில் இலைமறைகாயாக இருக்கும் பிரயம் என்ற கோட்பாட்டை சுருக்கமாக எடுத்துக்காட்டுகின்றது. பிரம்மம் எல்லா உயிர்களிலும் பொருள்களிலும் நிறைந்திருப்பதை பூடகமாக

அறியக்கூடியதாகவிருப்பினும் மனித உடலில் ஆத்மாவாகவும் இருப்பதை ஆழ்ந்த சிந்தனையின் அனுபவத்தால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.

பிற்காலத்தில் எழுந்த உபநிடதங்கள் யோகநிட்டையின் பயிற்சியை இத்தீவிர முயற்சிக்கு உகந்ததாக குறிப்பிடுகின்றன. உபநிடதசாரமாக விளங்கும் பகவத்கீதையில் கடவுட்கொள்கையின் முழுமையான மலர்ச்சி பரிணாமமடைந்து காணப்படுகிறது.

வேத காலத்திற்குப் பின்னர் கிளைத்த இந்து மதத்தின் எல்லாப் பிரிவுகளிலும் கர்மம் - நல்வினைதீவினை கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவ்வக்கிளை மதங்களிலும் கர்மக கோட்பாடு ஆழமாக நிலைக்கொண்டுள்ளதைக் காணலாம். ஒருவர் தான் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப பிறவிகள் பலவும் எடுத்தெடுத்து கர்மபலனை அறுத்து ஒழிப்பதாக விளக்கப்பட்டுள்ளது. மறுபிறவியாகிய நிர்ப்பந்தத்திலிருந்து நீங்கி துன்பத்திலிருந்து விடுதலைபெற்ற மோ'ம் அல்லது முக்தியை ஒருவரின் ஆன்மா அடையும் என்ற நம்பிக்கை ஆசாபாசங்களை நீக்கி சத்தியத்தை உணரத் தலைப்பட்டு, ஈற்றில் தாள்பதலை போல் (தாடலை) இறைவனுடன் ஒன்றாகியுடனாகி விடுதலை பெறுதல் என்னும் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.



இந்திய உபகண்டத்தின் வடமேற்கே பாய்ந்து செல்லும் பெரு நதியாகிய சிந்து என்ற பெயரிலிருந்தே ஹிந்து என்ற பதம் வழக்கில் வந்தது. புராதன கிரேக்கமும் ஆமேனியர்களும் சிந்து நதியின் கிழக்கே (மறுகரையில்) வாழும் மக்களை சிந்துக்கள் எனப்பெயரிட்டு வழங்கினர். இதுவே ஹிந்து என மருவி நிலைகொண்டுள்ளது. ஆபுகானிஸ்தான் முதலான வெளிதேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வந்து சேர்ந்த முஸ்லிம்கள், இந்தியாவிலுள்ள மக்களை வேறுதேசத்தவராகிய தங்களிலிருந்து வேறுபடுத்தி அழைப்பதற்காக ஹிந்துஸ்தானியர்கள் என பெயர் வழங்கி அழைத்தனர். பிரித்தானியர் இந்தியாவில் தம் ஆட்சியை நிலை நாட்டியபின் இந்தியமதங்கள் பலவற்றையும் சேர்ந்தமக்கட் தொகுதியை ஹிந்துக்கள் - இந்து சமயிகள் என


விழித்தனர். எனவே சிந்து நதிக்குகிழக்கே உள்ள பிரதேசமக்களின் சமயநெறியும், சிந்தியர்கள் என வழங்கிய மக்கட்தொகுதியினரும் இந்தியன் (ர்) எனவே அழைக்கப்பட்டு பெருவழக்காக "இந்திய" என்ற பெயரெச்சத்தை ஏற்றுநிலை பெற்றது.

Hinduism: definition ஹிந்து சமயம் - வரைவிலக்கணம் Religion என்ற பதம் இரு இலத்தீன் மொழிச் சொற்களான RE(BACK), LIGARE (TO BIND OR BRING) - ”றி” (பின்னே) ”லிகாறே” (கட்டு அல்லது, கொண்டுவா) என்ற பொருளையுடையவைகளினால் ஆக்கப்பட்ட கூட்டுப்பதமாகும்.

மனிதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாய வழக்குப்படி அமைந்த ஜீவிய முறைதான் சமயவாழ்வு என நிலைத்துள்ளது. இந்துசமயம், சமயசம்பிரதாயங்கள் மட்டுமல்லாமல், நல்ல நோக்கங்கொண்டுள்ள தத்துவதரிசனச் செல்வம் பொருந்திய ஒரு வாழ்க்கை முறையாகவும் அமைந்துள்ளது. இந்திய மக்களால் (அல்லாமலும் பிரதேசமக்களாலும்) அநேகமாக பிரதானமான நம்பிக்கையாகவும் பின்பற்றப்படுகின்றது.



சிந்து நதி தீரத்தில் கி.மு 3200-1600 இடைப்பட்ட காலத்தில் சிறப்புற்றோங்கி உயர்ந்திருந்த நாகரிகம் இது என நம்பிக்கையுடன் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இங்கே வாழ்ந்த மக்கட்தொகையினர், பிற்காலத்தில் இந்து சமயம் என வழங்கப்படும் சமயநெறியுடன் நெருக்கமான தொடர்புடைய வழிபாட்டுமுறையை நடைமுறைப்படுத்தி விரிவாக்கம் செய்திருந்தனர். பின்னர், காலக்கிரமத்தில் தெற்கே வாழ்ந்த திராவிடமக்களின் சமய கலாச்சார தாக்கத்தால் வசீகரிக்கப்பட்டுவிட்டதை அறியக் கூடியதாகவுள்ளது. கிமு 1500 அளவில் ஆரியர்களின் இடப்பெயர்ச்சி, குடியேற்றம் காரணமாக சிந்து வெளி நாகரீகம், சமயநெறி முதலியவை இயல்பாகவே பின்னடைவான நிலையை அடைந்தது.



பன்னெடுங்காலமாக நிலவிவந்த ஐதிகமும் பரம்பரைச் சம்பிரதாயங்களும் திரண்ட ஒரு கதம்பமாகவே இந்து சமயம் விளங்குகின்றது. ஒருதத்துவ தரிசியினாலோ, அல்லது போதனையினாலோ நிலைநாட்டப்படாமல் நீண்டகாலமாக பண்முகவளர்ச்சி பெற்று இந்தியதேசத்தின் பரந்த நிலப்பரப்பில்

வேரூன்றிய பரம்பரை, ஐதீகம், கலாசாரம், என்னும் இன்னோரன்ன பற்பல அம்சங்களை ஒன்றிணைத்து வளர்ந்ததே இந்து மதம். பொருளாதார அரசியல் சமுதாய இடையூறுகளால் குறுகிய மனப்பான்மையான சமயங்களை வாள்முனையில் பரப்பும் அபிலாட்சைகொண்டுள்ள இராணுவவெறியினரின் அட்டூழியங்கள் இல்லாமல் சுதந்திரமான போக்கினை செலவழிப்பாதையில் அடியெடுத்து வளர்ந்திருப்பது இந்து சமயம். சுயநலமற்றபலர் தம்கொள்கைகளில் நெகிழ்வு மனப்பான்மையுடன் புதியன புகுத்த உடன்பாடுகொண்டிருந்தனர். இதனால் புதியன புகுதலும் பழையன கழிதலுமாக புத்தாக்கம் இடம்பெற்று இந்து மதம் வளம் பெற்றது.

கி.மு 1000 ஆண்டளவில் இருக்குவேதமும் முதன்முதலாக பாடப்பட்டிருக்கலாம் எனவும் நால்வேதங்களின் தெய்வீக ஞானம் (அறிவு) இந்து சமய தத்துவஞானத்தின் அடிப்படை எனவும் கொள்ளப்படுகின்றது. ஆன்மீக லௌகீக இயல்புகள் உபநிடதங்களில் ஆழமாகச் சுழியோடி ஆராயும்படியாக அமைந்துள்ளன. இராமாயணம் மகாபாரதம் என்னும் இதிகாசங்கள் உபநிடதகாலத்துக்கு பிந்தியவை. மனுஸ்மிருதி போன்ற நீதிநூல்களும், ஸ்ருதிகளும் அக்காலத்திலே தோன்றின. தர்மத்தினடிப்படையில் அமைந்ததால் இந்து சமயத்தினை ”சனாதனதர்மம்” என வழங்கும் வழக்கம் உண்டாயிற்று. அந்த தர்மத்திலிருந்து வழுவாமல் இந்துக்களின் வாழ்க்கையின் செல்வழி அமைந்தது. சனாதன தர்மத்தின் வழி வாழ்பவன் ஹிந்து எனத்தன்னைச் சொல்ல உரிமையுள்ளவனாகிறான். நேரடியான அனுபவ ஞானத்தில் அல்லாது பிரமாணங்களின் வற்புறுத்தலில் இந்து சமயம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஞானத்தை அனுபவத்தால் பெறுவதல்லாது புத்திக்கூர்மையானவிவேகத்தால் பெறப்படும் கொள்கைகளின் இணக்கப்பாட்டில் பெறுவதன்று. ஒருவன் எந்தவொரு சமய இலக்கியத்தையும் சந்தேகம் தெளிதற்பொருட்டு ஆட்சேபனைசெய்யவும் வினாஎழுப்பவும் பூரண சுதந்திரம் உண்டு. கடவுள் இருக்கின்றாரா? என்ற ஐயப்பாட்டுடன் கூட விசாரணை செய்ய உரிமையுண்டு. நம்பிக்கைகளில் அல்லாமல் முழுமையான சத்தியத்தில் சிரத்தையும் நாட்டமும் நோக்கமும் தான் முக்கியமாகும். பிரபஞ்சம் முழுவதும் பரவி, நீக்கமற நிற்கும் சத்தியப்பொருள் எப்போதுமே யாரையும் சுட்டுவதாகவோ சார்ந்ததாகவே இருப்பதில்லை. முடிவான உண்மையாகிய இறைவன் இருக்குவேதம் எப்படிச் சுட்டுகிறதெனில்:-

"ekam sath vipraha bhahudha vathanthi" -”ஏகம சத் விப்ரஹ பகுதா வதந்தி” என்பதே

”சத்தியம் ஒன்றே, ஞானிகள் பற்பல நாமங்களால் அதை அழைக்கின்றார்கள்” என்பதே இதன் பொருளாகும்.

**இந்து சமயத்தின் புனிதமான இலக்கியங்கள்**

இரு தனித்தனி பகுதிகளாக இந்து சமயத்தின் புனித நூல்கள் பகுக்கப்பட்டுள்ளன. அவை சுருதி என்றும் ஸ்மிர்தி என்றும் கூறப்படும். சுருதி என்பது வேதங்கள், அவை தெய்வீகமாக அருளப்பட்டவை (சிவபெருமானால் அருளப்பட்டது) மிகதொன்மையான புனித நூல்கள் என்பவை உபநிடதங்கள்,

பிராமணங்கள், ஆரண்யங்கள், ஆகியவை ஆதியான காலத்தில் இருடிகளுக்கு தெய்வங்களால் திருவாய்மலர்ந்தருளப்பட்டவை. சுருதிகள் இருக்கு, யீர், சாமம், அதர்வணம் என நான்காக தொகுக்கப்பட்டன. வேதங்களில் பிரபஞ்சம், படைப்பு, வேள்விகள் நடாத்த உதவும் ஏடுகள் (பத்ததி) பற்றிய குறிப்புகள், மற்றும் தெய்வங்களுக்குரிய வேண்டுதல் தோத்திரங்கள் என்பன இடம்பெற்றுள்ளன. உபநிடதங்கள் ஏனைய மூன்று சுருதி இலக்கியங்களில் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. உபநிடதங்கள் குருசிஷ்ய முறையில், சீடர்களுக்காகவே இரகசியமாக அவர்களின் செவிகளுக்கு மட்டும் கேட்கக் கூடிய தொனியில் உபதேசிக்கப்பட்ட போதனைகள், மற்றைய இலக்கியமாகிய ஸ்மிர்தி ஒருவரிடமிருந்து ஒருவருக்கு கையளிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவைகளும் உணர்த்தி வெளியிடப்பட்ட சத்தியத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்டு ஆதாரமாகக் கொள்ளப்பட்டன. எப்படியெனினும் அவை முனிவர்களாலும் இருஷிகளாலும் ஒழுங்குபடுத்தப்பட்டுத் தொகுக்கப்பட்டன எனக் கருதப்படுகின்றன. இதிகாசங்கள், சூத்திரங்கள், புராணங்கள் என்பவை ஸ்மிர்தி இலக்கியங்களில் அடங்கும். இராமாயணமும் மகாபாரதமும் இவைகளில் முனையதான ஆக்கங்களாகும். இந்தப் புனித நூல்களில் போர்வீரர்களின் வாழ்க்கையில் இடம் பெற்ற வீரதீர, சாமபேததான தண்ட சம்பவங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. சூத்திரங்கள் தர்மம், யோகம், வேதாகங்கங்கள், பற்றியவை. இந்து சமய நீதியை எடுத்துச் சொல்லும் மநுஸ்மிர்தி - மநுநீதியின் சட்டங்களையும் அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டியமுறை பற்றியும் கூறுகிறது. ஆகையால் இந்நூல் மிகவும் முக்கியமானதாகவும் இந்து சமுதாயத்தை அனைத்து வளர்த்துக் கட்டிக்காப்பதாகவும் கருதப்படுகிறது. மநுநீதி இந்துக்களின் சமுதாய ஒழுங்கு முறையைப் பேணிப் பராமரித்து நிற்கின்றது எனலாம். புராணங்கள் தொன்மையான தெய்வீகக்கதைகளைக் கொண்டிருப்பதால் தேவ, தேவியர்களின் மகிமைகளைப் பற்றியதாக இருக்கின்றன.



